# தலைநகர் மாநகர சபையின் தொழில் வல்லுநர்கள்
# பினாங்கு மாநிலத்திற்கு வருகை

ஆர்.ரமணி



பினாங்கு, பிப். 27- தலைநகர் கோலாலம்பூர் மாநகரசபையில்பணியாற்றுகின்ற பல்வேறு துறைகளின் தொழில் நிபுணர்களும், துறை சார்ந்த வல்லுநர்களும் உள்ளடங்கிய 20 பேர் கொண்ட குழுவினர், இங்கிருக்கும் மாநில மாநகர் மன்றத்திற்கு மரியாதை நிமித்தமாகவும் அதே வேளையில் நட்பார்ந்த ரீதியாகவும் சிறப்பு வருகை புரிந்தனர்.

வடிகால் திட்ட அமைப்பு ப் பிரிவு,



சாக்கடை மற்றும் நதிநீர் திட்டப் பிரிவு, இடையூறு தணிப்புப் பிரிவு ஆகிய துறைளைச் சார்ந்த தொழில் வல்லுநர்களும், நிபுணர்களும் தலைநகர் மாநகர் மன்றத்தின் வடிகால் திட்டப் பிரிவின் துணைத் தலைமை இயக்குநர் நோர் ஷப்ரி பின் பித்தா தலைமையில் இங்கு வருகை மேற்கொண்டிருந்தனர்.

இக்குழுவினரை வரவேற்ற மாநில மாநகர் மன்றப் பிரதிநிதிகள், அவர்களோடு அளவளாவிய கருத்துப் பரிமாற்றக் கூட்டத்தில், திடீர் வெள்ள பாதிப்புகளுக்கு எதிரான தவிர்ப்பு திட்டங்கள் மற்றும் அவற்றுக்கான விவேகத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பில் விவாதக் களம் நடத்தி கூட்டுத் திரட்டுகளுக்கு வித்திட்டனர்.

மாநில மாநகர் மன்றத்தின் பொறியியல் துறையின் மூத்தப் பொறியாளர் முகமட் நஸ்ருல் நிஸாம் பின் நஸ்ரி வெள்ளப் பிரச்சினைகளை சமாளிக்கும் பற்பல உத்திகள் தொடர்பில் இக்குழுவினர் முன்னிலையில் தத்தம் கருத்துகளை முன் வைத்து உரையாற்றினார்.

இந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் மாநில மாநகர் மன்ற நகர்ப்புற சேவைத் துறையின் அணித் தலைவர் முகமட் சம்சுரி பின் ஹுசேன், நிவாரண உத்திகள் பிரிவின் தலைமை அணித் தலைவர் ஃபாரிஸ் ஐமான் நோராஷிடி ஆகியோரும் உடன் பங்கேற்றனர். இரு தரப்பினருக்கும் இடையேயான இக்கூட்டம், எதிர்பார்த்த இலக்கை எய்துமென்ற நம்பிக்கையுடன் நிறைவடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.